17th September 1958]

Drinking Water

* 243 *Q.*—Sri M. C. MUTHUKUMARASWAMY : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலுக்கா—நன்னிலம் மேஜர் பஞ்சாயத்து போர்டுக்கு உட்பட்ட மூலமங்கலம் ஆதி திராவிடத் தெருவில் மேற்படி பஞ்சாயத்து போர்டாரால் கட்டப்பட்டுள்ள குடி தண்ணீர் கிணற்றை பழுது பார்க்க வேண்டுமென எப்போது மேற்படி பஞ்சாயத்து போர்டாரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) மேற்படி வேலை தாமதிக்க காரணமென்ன ?

(ஈ) இதன்மீது தணிக்கை அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The Nannilam Panchayat has not passed any resolution in the matter.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

Sri M. C. MUTHUKUMARASWAMY : மூலமங்கலம் ஆதி திராவிட தெருவில் கட்டப்பட்டிருக்கும் கிணற்றை நானே நேரில் போய்ப் பார்த்தேன். அதில் தண்ணீர் இல்லாமலும், ரிப்பேர் செய்யப்படாமலும் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அங்கு அதிகமாக குடிஜனங்கள் வசிப்பதால், இனியாவது நடவடிக்கை எடுத்து, கிணற்றை ரிப்பேர் செய்வதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : எனக்கு வந்த தகவல்களிலிருந்து அங்கிருக்கும் கிணறு நல்ல மாதிரிதான், உபயோகிக்ககூடிய நிலைமையில்தான் இருக்கிறதாகத் தெரிகிறது.

Madras Farmers' tour

* 244 *Q.*—Sri N. K. PALANISAMI (on behalf of Sri V. K. Kothandaraman) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958 ஜூன் மாதத்தில் நமது ராஜ்யத்திலிருந்து அகில இந்திய விவசாய பிரதிநிதிகள் சுற்றுப் பிரயாணம் போனார்களா ?

(ஆ) எவ்வள்வு பேர் ?

(இ) இதில் ஹரிஜனங்கள், ஹரிஜனரல்லாதவர்கள் எவ்வளவு பேர் ?

(ஈ) சுற்றுப்பிரயாணம் போகக்கூடியவர்களுக்குச் செலவாகும் பணம் சர்க்காரைச் சேர்ந்ததா அல்லது போகக்கூடியவர்களுடையதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) 323.

(*c*) Particulars are not available.

(*d*) The expenditure is borne by the tourists.

Madras Central Jail

* 245 *Q.*—Sri K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there were transfers of some officers of Madras Central Jail to other Jails during the months of April and May of 1958; and

(*b*) if so, how many of such officers and to what places?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) One Jailor was transferred from Central Jail, Madras, to Central Jail, Cuddalore.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to shift the Madras Central Jail to the outskirts of the City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal at present.

Cart tyres

* 246 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri T. Veluchami) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்கு வண்டிப்பட்டைகளும் கொழுக்கலப்பை இரும்புகளும் கோவாப்ரேடிவ் ஸ்தாபனங்கள் மூலமாக சப்ளை செய்ய ஏதேனும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Sir ; there is no such proposal at present.

Bulls

* 247 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Scheduled Caste people following the Christian religion are benefited and given free grants for the purchase of bulls; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No free grant is given by the Animal Husbandry Department towards the purchase of bulls either to the people of the Scheduled Castes following the Christian religion or to any other caste following any other religion.

(*b*) The question does not arise.

SRI S. LAZAR : எந்த அடிப்படையிலே கடன் கொடுக்கப்படுகிறது ? பொருளாதாரத் துறையில் தாழ்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்கும்போது, அதிலே மத வித்தியாசம் காண்பிக்கலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடை இலாகா சார்பாக இம்மாதிரி ஒன்றும் நடைபெறுவது இல்லை என்று நான் சொன்னேன். ஆகையால் இந்த உப கேள்வி எழவில்லை.

SRI V. SANKARAN : கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஹிந்து மதத்தில் இருக்கும் ஏற்றத் தாழ்வு இல்லை என்று சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும்போது, பழைய நிலையைக் குறிப்பிட்டு சொல்வது சரியா ? அப்படி யென்றால் அதை ஆஸ்பதமாகக்கொண்டு, அவர்களுக்குச் சலுகை கொடுக்கலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I may submit that this supplementary question does not arise at all. I have said that there are no such concessions given to any communities under the auspices of the Animal Husbandry Department.